செய்தி வெளியீடு எண் :09 நாள் :05.05.2018

### *தேனி மாவட்டம்*
### *வேலைவாய்பபற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமில்*
### *மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு ரூ.86.64 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகளையும், 129 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.*

******

தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி கம்மவார் சங்க பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க(மகளிர்த்திட்டம்)த்தின் சார்பில், நடைபெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமில் இன்று (05.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ,ஆ.ப., அவர்கள் 180 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பிலான சுழல் நிதிக்கான மானியத்தொகையினையும், 276 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.76.79 இலட்சம் மதிப்பிலான வங்கி நேரடிக் கடனுதவியினையும், 61 மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு ரூ.8.35 இலட்சம் மதிப்பிலான தனிநபர் கடனுதவியினையும், என மொத்தம் 517 பயனாளிகளுக்கு ரூ.86.64 இலட்சம் மதிப்பிலான கடனுதவியினையும், 25 பயனாளிகளுக்கு செவிலியர் உதவியாளர் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களையும், 28 பயனாளிக்கு ஓட்டுநர் உரிம அடையாள அட்டைகளையும், 129 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான ஆணையினையும் வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவிக்கையில், தமிழக அரசு படித்து வேலை தேடும் இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் பல்வேறு நலத்திட்டகளை தீட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசு, படித்த வேலை தேடும் இளைஞர்கள், சுய தொழில் தொடங்கிட விருப்பமுள்ள, தொழில் முனைவோர்களை கண்டறிந்து, அவர்களை ஆற்றல் மிக்க தொழில் முனைவோர்களாக உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்திலும், அவர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவி அளித்து புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கிட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டும், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி தேர்ச்சி பெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ரூ.5.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி வரை 25 சதவீத மானியத்துடன் கூடிய கடனுதவியும், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்கள் தொடங்கிட முறையே ரூ.1.00 இலட்சம், ரூ.3.00 இலட்சம் மற்றும் ரூ.5.00 இலட்சம் வரை 25 சதவீத மானியத்துடன் கூடிய கடனுதவியும் வழங்கி வருகிறது.

தமிழக அரசு படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் துறையில் எளிதில் வேலைவாய்ப்பு பெற உதவும் வகையில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் மற்றும் தொழிற்கல்வி படித்தவர்கள் பங்கேற்று பயன்பெறும் வகையில், அரசுத்துறைகளின் மூலம் பல்வேறு தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

வேலையளிப்போர் கோரும் சிறப்பு திறன்களை அறிந்து அதற்கு பயிற்சி அளிக்க ஏதுவாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இயக்கப்பட்டு வருகிறது, வெளிநாடுகளுக்கு சென்று வேலை பார்க்க விரும்புவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் அநேக சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்தின் மூலமும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கிராமப்புறங்களில் வாழ்கின்ற கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு தொழில் சார்ந்த பயிற்சியளித்து, தொழில் தொடங்கிட தேவையான உதவிகளை தமிழக அரசு செய்து வருகிறது. அதனடிப்படையில், மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு நமது மாவட்டத்தில் 2011-ஆம் முதல் 2017-ஆம் ஆண்டு வரை 2588 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதிக் கடனாக ரூ.15.345 கோடியும், பொருளாதாரக் கடனாக ரூ.6.95 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இங்கே பணி நியமன ஆணைகளைப் பெறும் அனைத்து இளைஞர்களும் சீரிய முறையிலும் நேர்மையாகவும் பணியாற்றி வாழ்க்கையில் அனைத்து வெற்றிகளையும் பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்வேலை வாய்ப்பு முகாமில் சென்னை, காஞ்சிபுரம், கோவை, திருப்பூர், திருச்சி, சேலம், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களை சார்ந்த 34 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. இம்முகாமில் கலந்து கொண்ட 516 இளைஞர்களில் 129 இளைஞர்கள் பல்வேறு பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமில், மத்திய வணிகவரித்துறை துணை செயலாளர் திரு.எஸ்.டி.வெங்கடாசலபதி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.மு.கல்யாணசுந்தரம் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கே.வைத்தியலிங்கம் அவர்குள், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குநர் திரு.கே.மோகன் அவர்கள், உதவித்திட்ட அலுவலர்கள் திரு.செல்வராஜ் அவர்கள், திரு.தங்கப்பாண்டியன் அவர்கள், திரு.முருகேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**